# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII, Cr.P.C)
## IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, RANIPET

Case No. **SC.No. 77/2023**
Prosecution: **PW- 5**

**Deposition of the witness of LW- 7**

| **Name** | திரு. பாபு (எ) விநாயகம் | **District** | இராணிப்பேட்டை |
|---|---|---|---|
| **Father's Name** | துரைசாமி | **Calling** | விவசாயம் |
| **Age** | 56/2026 | **Religion** | --- |
| **Village/Town** | இராமாபுரம் | **Caste** | --- |
| **Taluk** | வாலாஜா | **Aadhar Card No.** | 8967 3299 0608 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 14th day of July 2026.

1,3, 5 எதிரிகள் ஆஜர். 4ம் எதிரி காவலில் இருந்து பிடி ஆணை மூலமாக நேரடியாக ஆஜர் செய்யப்பட்டார். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். 4ம் எதிரி தன் வழக்கில் தானே ஆஜராவதாக தெரிவித்தார். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:–**

1. நான் தற்பொழுது எண்.4/107 கொள்ளைமேடு, வாலாஜா தாலுக்காவில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன்.

2. என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜர் மற்றும் கைப்பற்றுதல் மகஜரிலுள்ள முதலாவது சாட்சி கையொப்பங்கள் என்னுடையது இல்லை. போலீசார் அழைத்ததன் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். போலீசார் என்னை விசாரித்தபோது என்ன பிரச்சனை என்று எனக்கு தெரியாது என்று சொல்லிவிட்டேன்.

(சாட்சி அரசு தரப்பு வழக்கிற்கு சாதகமாக சாட்சியம் அளிக்காததால், அவரை பிறழ் சாட்சியாக பாவித்து அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டார். சாட்சியை அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்படுகிறது.)

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:-**

1. காவல் துறையினர் என்னை விசாரித்தார்கள் என்றால் சரியல்ல. காவல்துறையினர் விசாரணையின் போது, கடந்த 31.08.2018 ஆம் தேதி காலை 06.15 மணிக்கு நானும், எங்கள் ஊரை சேர்ந்த சண்முகமும் இராமாபுரம் கிராமம், மலைப்பகுதியில் உள்ள பைரவர் கோயில் அருகே சென்றபோது, போலீசார் எங்கள் முன்னிலையில் வழிப்பறி வழக்கு சம்மந்தமாக விசாரணை செய்து சம்பவ இடத்தை மாதிரி வரைபடம் வரைந்து, பார்வை மகஜர் தாயார் செய்தாரா என்றால் சரியல்ல.

2. எங்கள் முன்னிலையில் விசாரணை செய்து தயார் செய்த பார்வை மகஜரில் நானும், சண்முகமும் சாட்சி கையொப்பம் செய்து விட்டு, அன்றைய தினமே காலை 07.15 மணிமுதல் 08.15 மணிவரை பைரவர் கோயில் அருகிலிருந்து 1. கருப்பு நிற சி.டி.100 இருசக்கர வாகனம், 2. நீல நிற Hero Honda Splendor Plus இருசக்கர வாகனம், 3. சுமார் ஒரு அடி நீளமுள்ள கத்தி இரண்டு ஆகியவற்றை மகஜரில் கைப்பற்றினாரா என்றால் சரியல்ல. மேற்கண்ட பார்வை மகஜர் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் நானும், சண்முகமும் சாட்சி கையொப்பம் செய்துவிட்டு, எதிரிகளை இவ்வழக்கிலிருந்து காப்பாற்ற வேண்டி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** – இல்லை.

Taken down before me in open court, read over to the witness and admitted by the deponent to be correct.

Sd/-A.Daoudh Ammal,
Assistant Sessions Judge/Chief Judicial Magistrate, Ranipet.